## வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் - 2022

---

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான நிதிக்கூற்றுக்கள் 2023 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட கட்டிட கூட்டுத்தாபனத்தால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 04 வருடங்களும் 08 மாத தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>கம்பனியால் பயன்படுத்தப்பட்ட கணனி சேவர் இயந்திரம் செயலிழந்தமையின் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது வைரஸ் தொற்றின் காரணமாக செயலிழந்திருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது தரவு மீள்சேமிப்பு (Backups) களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளப்படாமையின் காரணமாக கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான | 2018 இன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய் விற்காக 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதிய வழங்கப்பட்டுள்ளது. 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் செயலிழந்த கணனி முறைமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் மேற் கொண்டு அது தொடர்பான அறிக்கை 2024 மார்ச் 04 ஆம் | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தகவல்கள் இல்லாதிருந்ததாக காண்பித்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிப்படையில் இது தொடர்பாக 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தற்போதைய நிலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திகதி வரை கிடைத்திருக்க வில்லை. | |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 உள்ளக கட்டுப்பாடு

கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள், விற்பனை துறைகளில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### 2.1.1 பொருட்களைக் கொள்வனவு செய்தல்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரைவு மாதாந்த கணக்கறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் எஸ்பெஸ்டோஸ் இரும்பு, டைல்ஸ், சீமெந்து, மணல், ஏனைய பொருட்களாக மொத்த கொள்வனவுகள் ரூபா 941 மில்லியன் ஆகும்.<br><br>இந்த பெறுகை நடவடிக்கைகளின் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய இலக்கம் 06 என்ற தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரிவில் QB இல் உள்ள தரகளின் பிரகாரம் இந்த மொத்த கொள்வனவுகளும் மேற்கொள்ளப்படுள்ளது.<br>தற்போது இருக்கின்ற பெறுகைகள் குழு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளது.<br>எதிர்வரும் ஆண்டிற்காக பெறுகைக்குழு வழிகாட்டிக் கோவையின் 2.7.5 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளது. | நிறுவனத்திற்கான கொள்வனவுகளை மேற் கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) இன் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழு விடயங்களின் கீழ் கொண்டுவரப்படுகின்ற சகல பெறுகைகளுக்காகவும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பெறுகை தீர்மானங்களை எடுப்பதற்காக பெறுகைக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தலைவரால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் மூலம் பெறுகைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மதிப்பீடு வழங்க வேண்டி யிருந்த போதிலும் விடயங்களின் கொள்வனவுக்காக தேவையான விடயங்கள் தொடர்பாக விஷேட நிபுணர்களின் மதிப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று 2024 சனவரி மாதத்தின் போது 2.8.1(அ) இன் பிரகாரம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கான கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதமர் அலுவலகத்தினால் செலவினங்கள் மீளளிப்புச் செய்யப்படுகின்ற பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர் இல்லங்களை பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தும் செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்வதற்கான செயற் திட்டங்களுக்குரிய வடிவமைப்பாளர்களின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களால் பெயிடப்பட்ட 16 வழங்குநர்களிடமிருந்து எந்தவொரு கூறுவிலையும் கோராமல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும், அரசாங்கத்தின் பெறுகைகள் நடைமுறையைப் பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கான கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களும் பெறுகைகள் அலகொன்றாக தேசிய இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்த போதிலும் கம்பனி உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. மேலும் வழிகாட்டி 9.8(ஈ) இன் பிரகாரம் நிறுவனத்திற்காக இலத்திரனியல் தபால் ஊடாக கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாதிருந்த போதிலும் கம்பனியின் பெறுகைகளில் அதிக அளவு இலத்திரனியல் தபால் ஊடாக பெறப்படடிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் அரசாங்கத்தின் பெறுகைகள் நடைமுறையைப் பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் கம்பனியால் பெறுகை நடவடிக்கைகளுக்காக தேசிய இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 35 இன் 2.14.1 இன் பிரகாரம் ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக திறந்த போட்டியாளர் கூறுவிலை முறைமையின் கீழ் பொருத்தமான வழங்குநர் தெரிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக விலை இணக்க முறையின் கீழ் வழங்குநர்கள் தெரிவு செய்யப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும் அரசாங்கத்தின் பெறுகைகள் நடைமுறையைப் பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் குறித்துரைத்த பெறுகை முறைமையின் பிரகாரம் வழங்குநர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.1.2 பொருட்களின் விற்பனை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்காக கம்பனியால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கணக்கு அறிக்கையின் பிரகாரம் கம்பனியின் விற்பனைப் பெறுமதி ரூபா 3,324 மில்லியன் ஆகும். இந்த விற்பனைப் பெறுமதியில் விற்பனைகள் அதிகரிக்கும் நோக்குடன் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி / பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக பிழையாக விநியோகிக்கப்பட்ட ரூபா 557.02 | இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். இதற்காக குழுவொன்று நியமித்து முகாமைத்துவத்திற்கு அறிவித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு | பிழையாக மேலதிகமாகக் காண்பிக்கப்பட்ட விற்பனையை சரியாக கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு விரைவாக ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான 98 பல்டியல்களும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பிழையாக விநியோகிக்கப்பட்ட ரூபா 79.19 மில்லியன் பெறுமதியான 22 விற்பனை பட்டியல்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த விற்பனைகளுக்காக விற்பனை கட்டளையிடப்பட்ட பொருட்களுக்கிடையே நேரடியாக உரிய வேலைத் தளங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக பொருட்கள் கையேற்கப்பட்டமை மற்றும் மாதிரிகளுக்கு இணங்கியிருந்தமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் விற்பனைக்காக பொருட்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகை நடைமுறைகளை பின்பற்றி வெளிப்படையாக அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படா திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆகக்குறைந்த விலைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமையால் கிரயம் அதிகரித்ததன் காரணமாக பொருட்களின் விற்பனை விலை எண்ணிக்கையும் உயர்வடைந்து சென்றமை கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் சந்தையில் மற்றும் அதற்கு சமமான பொருட்களின் விலைகளுடன் போட்டியிடுவதற்கு கம்பனி தவறியிருந்ததன் அடிப்படையில் கம்பனியின் விற்பனை வருமானம் நாள்தோறும் வீழ்ச்சிக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி ஆகக்குறைந்த விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், போட்டி சந்தையில் போட்டியாளர் விற்பனை விலை எண்ணிக்கையின் கீழ் ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக உறுதிப்படுத்துதல் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 யூன் 30 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் கூட்டுமொத்தமாக ரூபா 453.60 மில்லியன் மற்றும் வெளித்தரப்பினருக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 471.98 மில்லியன் ஆக இருந்தது. | 2018 ஆம் அண்டிற்காக மீதி உறுதிப்படுத்துதல் பெறப்பட்டிருந்ததுடன் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக பெற்றுக்கொள்வதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதி மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக நாளதுவரையான தகவல் அறிக்கையினைப் பேணிச்செல்வதற்கும், ஆண்டின் இறுதியில் மீதியை உறுதிப்படுத்திக்கொள்வதற் கும் விரைவுபடுத்தி விரைவாக தீர்த்துவைப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2007 செப்டம்பர் 27 ஆம் திகதிய அமப/07/1625/342/021 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் இந்த கொடுப்பனவுகள் தொடர்பாக எமது நிறுவனத்தின் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பெறப்பட்ட முற்பணத் தொகையை மீளச் செலுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு உரிய காணியில் இருந்து 100 பேர்ச் அளவினை உடைய நில பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளிப்பதற்காக ரூபா 50 மில்லியன் முற்பண தொகை 2008 பெப்ரவரி 22 ஆம் திகதி கம்பனிக்கு கிடைத்திருந்தது.<br><br>எனினும் 2012 மே 07 ஆம் திகதிய இலக்கம் 12/0446/540/005 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2022 செப்டெம்பர் 27 ஆம் திகதிய மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கம்பனியினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட முற்பணம் மீளச் செலுத்த வேண்டி காணப்பட்டது. கணக்காய்விற்காக இறுதித் தடவையாக சமர்ப்பித்த 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் இந்த செலுத்த வேண்டி முற்பணத் தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் இந்த பணத்தை மீண்டும் வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் இந்த ரூபா 50 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை கிளையில் காணியொன்று ஈடுசெய்வதற்கு முன்மொழியப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் எமது முகாமைத்துவம் கலந்துரையாடல் மேற்கொள்கின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்படு மூலதன தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் கம்பனியால் ரூபா 150 மில்லியன் குறுகிய கால கடன் 2017 மார்ச் 02 ஆம் திகதி முதல் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 03 சந்தர்ப்பங்களின் போது மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை இலக்கம் 07 இன் பிரகாரம் பெறப்பட்ட கடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த கடன் தொகையை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் அல்லாமல் கம்பனியின் சம்பளம் செலுத்துதல், மிகை ஊதிய படி செலுத்துதல் போன்ற நிர்வாக | இதுவரையில் ரூபா 500,000 வீதம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உரிய கடன் பணத்திற்கு உரிய வட்டித் தொகை ஒதுக்கப்பட்டு கடன் தவணையாக செலுத்தும் திட்டமொன்று தயாரித்து எங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீள் கட்டமைக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கடன் பணத்தை பயன்படுத்தி கடனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினங்களை உள்ளடக்கிய ஏனைய செலவினங்களுக்காக இந்த கடன் பணம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>எனினும் இந்த கடன் தொகை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்தமையால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் பணம் மற்றும் அட்டுறு வட்டியுடன் மொத்த நிலுவைப் பணம் ரூபா 220.37 மில்லியன் ஆக இருந்ததுடன், அதற்காக செலுத்த வேண்டிய தண்டப் பணம் ரூபா 17.12 மில்லியன் ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நிதி நெருக்கடியை வெறறிகொண்டு நிர்மாண கைத்தொழிலில் வலுவான தரப்பினராவதற்கு கம்பனிக்கு இயலுமான வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் 28 ஆம் திகதிய அமப/18/0504/736/007 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் இலங்கை வங்கியினால் ரூபா 500 மில்லியன் தொகை 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் அத்திகதி வரையில் இலங்கை வங்கிக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 199.05 மில்லியன் தொகை குறைக்கப்பட்டு மிகுதி தொகையான ரூபா 301.38 மில்லியன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 35 சதவீதமான தொகை அதாவது ரூபா 105.98 மில்லியன் கடன் பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்ட ஊழியர் சம்பளம் செலுத்துதல், ஊழியர் சேமலாப / நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செலுத்துதல், கடன் வட்டி செலுத்துதல், மிகை ஊதியப் படி செலுத்துதல், மேலதிகப் பற்று செலுத்துதல், நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் என்பவற்றிக்காக செலவிடப்பட்டிருந்தன. இந்த ரூபா 500 மில்லியன் கடன் தொகையையும் இணங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்ததுடன், 2023 மே 26 இல் உள்ளவாறு நிலுவை கடன் வட்டி தொகை ரூபா 264.43 மில்லியன் ஆக இருந்தது. | இதுவரையில் நாட்டில் காணப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார உறுதித் தன்மையின் அடிப்படையில் அப் பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் சகல நிர்மாண நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டமையால் கட்டிடப் பொருட்களை வழங்கும் எமது நிறுவனத்திற்கான வியாபாரம் நடவடிக்கைகள் 90 சதவீத அளவினால் வீழ்ச்சியடைந் திருந்தது. இதன் காரணமாக கடன் மற்றும் வட்டிப் பணத்தை செலுத்துதல் தொடர்பாக குறித்துரைத்த திட்டமொன்று இந்தக் காலப் பகுதியில் சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன் கடன் மீள் கட்டமைத்தல் முன்மொழிவின் படி இந்த கடனை செலுத்துதல் தொடர்பான திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கடன் பணத்தை பெற்ற நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் முறைமை செயற்திறனாக இல்லாமையின் காரணமாக புதிய கணனி முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது 05 நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டது. இதற்கான மாதிரிகள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த போதும், அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தால் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணம் செலுத்தும் போது காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையை பரீட்சித்து பெறுகைக் குழுவினால் தீர்மானம் எடுக்க வேண்டியிருந்த போதிலும், அந்த பிரிவுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 0.982 மில்லியன் முற்பணம் பொது முகாமையாளரின் அங்கீகாரத்தில் 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.<br><br>எனினும் 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதி வரையில் கம்பனிக்கு பொருத்தமான கணனி மென்பொருள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கம்பனியின் விற்பனை, கொள்வனவு மற்றும் வங்கி மீதிகளின் தரவுகளை உள்ளடக்கும் போது கனிசமான அளவில் வழுக்கள் அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற மென்பொருள் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது நவீன தொழில்நுட்பத்தின் பிரகாரம் மற்றும் நிறுவன முறைமைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் கணனி மென்பொருளை கொள்வனவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு சரியான முறையில் நியமித்து சரியான அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கணனி மென்பொருளின் மொத்தப் பெறுமதி ரூபா 4.91 மில்லியன் ஆகும். அதில் 20 சதவீத முற்பணம் (ரூபா 982,350) பணிப்பாளர் சபை தீர்மானத்தில் முதலாவதாக வழங்கப்பட்டமையினால் பணிப்பாளர் சபை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு உள்ளகக் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவைகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.5 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் டைல் செயற்திட்டத்தின் கீழ் 2021 செப்டம்பர் மாதம் முதல் 2023 யூன் 30 வரை ரூபா 2,924.73 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்று பெறப்பட்டிருந்த போதிலும், 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 129.59 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 இல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஆண்டின் இறுதியில் கணக்குகள் தயாரித்துள்ளதுடன் அதனால் டைல்ஸ் வியாபாரத்திற்கு உரித்தான ஏற்பாடுகள் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி மற்றும் பெறுமதிசேர் வரி பெறுமதியும் VAT Return இல் சீராக்குவதற்கு முடியாமையினால் உள்நட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முடியாதிருந்தது. அதன் போது கூட்டுமுயற்சி தரப்பினர்களுக்குரிய வரிப் பகுதியும் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. அதனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இறுதி வரி செலுத்தவதற்கு கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் பொறுப்பாக இருந்தது. அதனால் கூட்டுமுயற்சியாளர்களின் வரிப் பகுதி மாத்திரம் ஒதுக்கி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முடியாதிருந்தது. | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட வரி தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 யூன் 15 ஆம் திகதிய நாஹா/வரி/நிலுவை செலுத்துதல் 2021 என்ற கொழும்பு மாநகர சபையின் பிரதி நகர பொருளாளரின் (வருமானம்) கடிதத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை ஆதனவரிப் பணம் ரூபா 23.34 மில்லியன் 2023 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஆதனவரி உரிய பிரகாரம் கொழும்பு மாநகர சபைக்கு செலுத்தப்படுவதுடன் முன்னைய நிலுவை வரி தொகையான ரூபா 23 மல்லியனுக்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடல் மேற் கொள்ளப்படுகின்றது. | செலுத்த வேண்டிய ஆதன வரி தொடர்பான விபரங்கள் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து விசாரணை செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொறட்டுவ மாநகர சபையால் 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதிய அனுப்பப்பட்ட ஆதனங்கள் தடைசெய்யும் கட்டளையின் பிரகாரம் பொறுப்பன மாலிகாவ வீதியில் அமைந்துள்ள இலக்கம் 25/2 என்ற ஆதனத்திற்காக 2020 இன் முதலாவது காலாண்டில் இருந்து நிலுவை ஆதனவரிக் கட்டணம் மற்றும் தண்டப்பணத் தொகையான ரூபா 1.49 மில்லியன் தொகை 2023 ஆகஸ்ட் 17 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஆதனவரி உரிய பிரகாரம் மொறட்டுவ மாநகர சபைக்கு செலுத்தப்படுவதுடன் முன்னைய நிலுவை ஆதன வரி தொகையான ரூபா 1.4 மில்லியனுக்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது. | செலுத்த வேண்டிய ஆதனவரியை உரிய காலப் பகுதியில் உள்ளடக்கிய செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடீ 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | செயற்பாட்டுக் கைநூலின் 5.1 ஆம் பந்தி மற்றும் 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 09/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01(3)ஆம் பந்தி | மிகை ஊதியக் கொடுப்பனவு செலுத்துவதற்கோ அல்லது இலாபத்தின் அடிப்படையாகக் கொண்ட படியினை செலுத்துவதற்கு முன்னர் ஒன்றிணைந்த நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய இலாபப் பங்கில் வரி செலுத்துதல் வேண்டும். மேலும் 2021 ஆம் ஆண்டில் நட்டமொன்று அறிக்கையிடப்பட்ட நிறுவனத்திற்காக இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு மிகை ஊதியப்படி செலுத்துதல் உரித்தில்லை. எனினும் கம்பனியால் வருடாந்த இலாபம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாதிருக்கும் போது 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 2.15 மில்லியன் மிகை ஊதியப்படியாக செலுத்தப் பட்டிருந்தது. | சகல மிகை ஊதியப் படிகளும் பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்று ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க மிகை ஊதியப் படி செலுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 6.7 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பாதிருந்ததுடன் 2024 சனவரி மாதம் முதல் இரண்டு வாரத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க பொருள் மெய்மையாய்வு குறித்துரைத்த திகதியில் மேற்கொண்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2017 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் MF/CG/02/(Cir) என்ற இலக்கத்தில் விநியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 01/2017 | கம்பனியால் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாட பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொம்ட்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடும் நாளதுவரையாக்கப்பட்டு பொருட்கள் விற்றுத் தீர்க்கப்படவேண்டி இருந்தமையும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க கம்பனியால் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொம்ட்றோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.7 வாகன பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகன இலக்கம் 226-3173 என்ற லொறி வண்டி 2014 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் தற்போது துருப்பிடித்த நிலையில் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் போதும் விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது வரையும் விற்றுத் தீர்க்கப்படவில்லை. விற்றுத் தீர்ப்பதற்கு அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களை இனங்காண்பதற்காக விஷேட ஆய்வு சபை | நிறுவனத்தின் ஓட்ட நிலைமையில் காணப்படாத வாகனங்களை ஓட்டத்திற்குப் பொருத்தமான தகுதியான நிலைக்கு பழுதுபார்த்துக் கொள்வதற்கோ அல்லது அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 13.2 பிரிவின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ கம்பனியினால் |

| | | | |
|---|---|---|---|
| | | யொன்று நியமிப்பதற்கான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தின் போது 227-3173 என்ற லொறி வண்டி தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பயன்பாட்டிற்காக கிரயம் ரூபா 26.29 மில்லியன் ஆன 05 வாகனங்கள் அமைச்சினால் 2018 - 2021 காலப்பகுதியில் கையளிக்கப்பட்ட போதும் அந்த வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. அந்த சகல வாகனங்களும் 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையில் ஓட்டத்தில் ஈடுபட முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன் பழுதுபார்ப்பதற்கோ அல்லது அமைச்சிற்கு மீளக் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் எமது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட வாகனங்கள் தற்போது ஓட முடியாத நிலையில் காணப்படுவதுடன் நிதி ரீதியான கஷ்டத்தின் காரணமாக அதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை. எனினும் இந்த வாகனங்களை நிறுவனத்திற்கு கையேற்பதாயின் அல்லது நிறுவனத்தில் வாகனங்களை பயன்பாட்டிற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தால் அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 251-9413 என்ற கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக 2019 யூலை 23 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 512,375 முற்பணமாக சேவை வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்க்காமல் நிறுவனத்தின் சுற்றாடலில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து குறித்துரைத்த நட்டத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இதற்குரிய தரப்பினரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 512,375 தொகையில் தற்போது ரூபா 125,000 தொகை நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது. | செலுத்தப்பட்ட முற்பண தொகையை மீண்டும் அறவிடுவதற்கோ அல்லது பழுதுபார்க்க கூடிய நிலைமையில் காணப்படுமாயின் அதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி கணக்காய்வுத் திகதி வரையில் கம்பனிக்குச் சொந்தமான இலக்கம் 300-8654, 253-8768, 253-0491, 251-9413 மற்றும் 226-3173 என்ற 05 வாகனங்கள் | முகாமைத்துவத்தின் ஆலோசனையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் | பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரையினைப் பெற்று தாமதமின்றி பழுதுபார்ப்பதற்கோ அல்லது |

| | | |
|---|---|---|
| ஓட்ட நிலையில் காணப்படவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விற்றுத்தீர்ப்பதற்கான அரசாங்க நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 13.2 பிரிவின் பிரகாரம் விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களை இனங்காணப்பதற்காக விஷேட ஆய்வு குழுவொன்று நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்துதல்** | | |
| (i) 2021 ஒக்டோபர் 26 ஆம் திகதிய இலக்கம் அமப21/1779/302/002/-1 அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தேவையான கட்டிடப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் வழங்கமுடியுமான சகல விடயங்களையும் வழங்குதல் மற்றும் சிவில் பொறியியல் வடிவமைப்பாளர் மற்றும் உள்ளக நிர்மாண வடிவமைப்பு தொடரபான ஆலோசனை ரீதியான சேவைகள் கேள்வி கோரல் இன்றி அரசாங்க நிறுவனம் ஒன்றான கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான பிரகாரம் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியால் தேவையான பொருட்கள் மற்றும் போதியளவில் எண்ணிக்கைகள் உள்ளடக்கிய மதிப்பீடு மற்றும் பொருள் வழங்கும் நிபந்தனை, பணம் செலுத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கி உடன்படிக்கையில் பிரதமர் அலுவலகத்துடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பொருட்களை வழங்குதல் தொடர்பாக முன்னாள் இருந்த பொது முகாமையாளர், பிரதமர் அலுவலகத்தின் செயற்திட்ட பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் அரச இராஜதந்திர உத்தியோகத்தர்களின் தலைமை அலறி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது வருடாந்தம் கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கையின் பிரகாரம் பொருள் வழங்குதலை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் போது செயற்திட்ட பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் வடிவமைப்பு கலைஞரினால் அவர்கள் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரை செய்த 16 வழங்குநர் எங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். அந்த பரிந்துரை செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து பொருட்கள் கட்டளையிட்டு | அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கும் பெறுகை வழிகாட்டிக் கோவையினை பின்பற்றுவதற்கும், கொள்வன வாளர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எமது நிறுவனத்திற்கு இலாப வீதத்துடன் பெற்று பொருட்களை வழங்குவதற்கு அவர்களால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | மேலும் ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்கும் கம்பனியின் பணிகளில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புகளுக்குத் தேவையான சிவில் பொறியியல் ரீதியான இல்ல ஆய்வு மற்றும் உள்ளக வடிவமைப்பு தொடர்பான ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குவதற்காக கூறுவிலை கோரல், தெரிவு செய்தல் போன்றவைகளுக்காக எந்தவொரு பெறுகை நடைமுறைகளும் பின்பற்றப்படாமல் எந்தவொரு உடன்படிக்கையும் இன்றி கம்பனியால் ரூபா 10 மில்லியன் தொகை உள்ளக வடிவமைப்பு கலைஞருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 யூலை 30 ஆம் திகதி வரையில் உரிய பட்டியலின் பெறுமதி ரூபா 3.07 மில்லியன் பிரதமர் அலுவலகத்தால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட தொடரிலக்கம் (i) இல் குறிப்பிடப்பட்ட முறையே வாய்மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க எங்களது முன்னாள் பொது முகாமையாளர் மற்றும் செயற்திட்ட பொறுப்பு உத்தியோகத்தரின் ஆலோசனையின் அடிப்படையில் உள்ளக வடிவமைப்பு கலைஞரின் தேவையான சேவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பாக ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குவதற்கு பிரதமர் அலுவலகம் ரூபா 13.07 மில்லியன் பட்டியல் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதற்காக ரூபா 10 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை மாத்திரம் வழங்குநருக்கு செலுத்தப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கும் வாடிக்கையாளர்களுடன் ஆரம்பத்திலேயே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கம்பனியால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கையின்படி 2023 யூலை 13 ஆம் திகதி வரையில் கம்பனியால் உத்தியோகபூர்வ இல்லங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 1.158 மில்லியன் ஆக இருந்ததுடன் இதில் ரூபா 9.97 மில்லியன் பெறுமதியுடைய வளிப்பதனாக்கி இயந்திரம், கேஸ் லைன், வைபை முறைமை போன்ற கம்பனியினால் வழங்கப்படுகின்ற கட்டிடப் பொருட்களுக்கு உரித்தல்லாத வகையில் வழங்கல்களும் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். எமது நிறுவனத்தால் நிர்மாண நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்களுக்கு மேலதிகமாக அநேகமாக பொருட்கள் கட்டளையிடப்பட்டு பெற்று கொள்ளுதல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு உதாரணமாக வளி பதனாக்கி, மின் குமிழ்கள், பலகை வகைகள், இலத்திரனியல் உபகரணங்கள் அநேகமான பொருட்களை உள்ளடக்க முடியும். | தமது வியாபாரத்தின் நோக்கத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் சரியான இலக்கில் செயற்படுதல் கம்பனியின் முகாமைத்துவத்திற்கு உரிய பொறுப்பாகும். |
| (iv) | மேற்கூறப்பட்ட வகையில் தெரிவு உள்ளக வடிவமைப்பு கலைஞரின் வாய்மூல ஆலோசனையின் அடிப்படையில் அவரால் | முன்னாள் இருந்த பொது முகாமையாளர், பிரதமர் அலுவலகத்தின் செயற்திட்ட | கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் |

| | | | |
|---|---|---|---|
| | பெயர் குறிப்பிடப்பட்ட 16 வழங்குநர்களிடமிருந்து இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு பெறுகை நடைமுறைகள் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்ட கட்டிட கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு கட்டளையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து. பின்னர் உத்தியோகபூர்வ இல்லங்களின் செயற்திட்டத்திற்கு பொருட்கள் விநியோகித்து அவை கம்பனியின் பெயரில் பட்டியல் இடப்பட்டிருந்தது.<br><br>பிரதமர் அலுவலகத்தால் மீளளிப்புச் செய்யப்படுகின்ற செலவினங்களை உள்ளடக்கிய உறுதிச்சீட்டிடுக்ககளில் கனிசமான அளவு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி எழுத்து மூலம் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அறிக்கைத் திகதி வரையிலும் அந்த உறுதிச்சீட்டிற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் உள்ளக வடிவமைப்பாளர் கலைஞரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் அவரினால் பரிந்துரை செய்யப்பட்ட 16 வழங்குநர்களிடமிருந்து கோரப்பட்ட கூறுவிலைகளின் பிரகாரம் கம்பனியின் கட்டளையிடல் பத்திரம் மற்றும் அதனடிப்படையில் பட்டியல் தயாரிப்பதற்கு பொது முகாமையாளர் எங்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். | வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கும் கொடுப்பனவுகளை சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் தேவையான உபகரண துணை ஆவணங்கள் யாவும் இணைக்கப்படல் வேண்டும். |
| (v) | 2023 யூலை 30 ஆம் திகதி வரையில் பிரதமர் அலுவலகத்தால் தீர்த்துவைக்கப்பட்ட தொகை ரூபா 559.59 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 90.23 மில்லியன் ஆகும். | நிறுவனத்தின் அறவிடல் தரவின் பிரகாரம் இந்தப் பெறுமதி சரியாக இருந்ததுடன் அந்தப் பணம் தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த சகல பணத்தையும் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் திருகோணமலை, குளியாப்பிட்டி, குருணாகல் மற்றும் தங்காலை விற்பனை நிலையங்களின் அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நடாத்தச் செல்லப்படுவதுடன் தங்காலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 35,000 மாதாந்தம் வாடகையும், குருணாகல் மற்றும் குளியாப்பிட்டி விற்பனை நிலையங்களுக்காக ரூபா 30,000 வீதமான மாதாந்த வாடகை திருகோணமலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 25,000 ஆன வாடகை செலுத்துவதற்கு கம்பனி, கட்டிட உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கட்டணம் தெரிவு செய்யப்பட்ட முறைமை கோவைகளைப் பரீட்சித்த போது கணக்காய்வில் அவதானிக்கப்படாதிருந்ததுடன் இந்த தெரிவு செய்யும் போது வெளிப்படையாக இருக்க வேண்டியமை தொடர்பாக ஆர்வம் காண்பிக்கின்ற சகல தரப்பினருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமைக்கும் மற்றும் | தங்காலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 35,000 மாதாந்த வாடகையும், குருணாகல் மற்றும் குளியாப்பிட்டி விற்பனை நிலையங்களுக்கு ரூபா 30,000 தொகையும் திருகோணமலை நிலையத்திற்கு ரூபா 25,000 தொகையும் செலுத்தப்படுகின்றது.<br><br>எனினும் தங்காலை மற்றும் குருணாகல் கிளைகளின் கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் தற்காலிகமாக இந்த களஞ்சியங்களைப் பேணிச்செல்வதற்கு | கம்பனிக்கு ஆகக்கூடிய இலாபம் பெறும் வகையில் உடன்படிக்கை செய்தல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகை பணத்தை மதிப்பீடு செய்த முறை தொடர்பாக உள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. <br><br> மேலும் 2022 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டிருந்த வரைவு மாதாந்த கணக்குகளின் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்ட சகல விற்பனை நிலையங்களிலிருந்தும் மீளாய்வாண்டில் நட்டம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. | |

## 2.9 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) டைல் செயற்திட்டம்** <br> நாட்டில் அந்நிய செலாவணியின் நெருக்கடியின் காரணமாக இறக்குமதிகள் வரையறுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சந்தையில் டைல் பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளும் நோக்கில் டைல் நிறுவனத்தின் அனுமதி 2021 யூன் 11 ஆம் திகதிய 2231/18 என்ற அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தில் கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இறக்குமதி நடவடிக்கைகளுக்கு செய்யக்கூடிய அளவில் நிதி வலுவைக் கொண்டிருக்காமையின் காரணமாக அந்த செயற்திட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற அந்த பொருள் விற்பனைக்கு விருப்பம் தெரிவிக்கின்ற கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் “BMC” என்ற பெயரில் அவர்களின் பணத்தில் டைல் இறக்குமதி செய்து விற்பனை செய்து கிடைக்கின்ற இலாபத்தில் 1/3 கம்பனிக்கு 2/3 நிறுவனத்திற்கும் நிதி அளிக்கின்ற கூட்டு முயற்சி கம்பனியாகவும் பகிர்ந்தளிப்பதற்கு இணக்கப்பட்டிருந்தது. டைல் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து 2023 யூன் 30 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட டைல் இறக்குமதிப் பெறுமதி ரூபா 928.88 மில்லியனாக இருந்ததுடன் விற்பனை பெறுமதி ரூபா 2,924.72 மில்லியனாகக் காணப்பட்டது. | | |
| (i) “BMC” என்ற பெயரில் டைல் இறக்குமதி செய்யப்படுகின்ற போதும் கட்டளையிடப் படுகின்ற சகல | இதன் போது BMC பொறுப்பாளராகக் செயற்பட்டிருந்ததுடன் | வர்த்தமானி பத்திரத்தின் நோக்கங்களுக்கு இணங்க செயற்பட |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைகள் தொடர்பாக கம்பனி அறிந்திருக்கவில்லை. டெலி கிரைபிக் ரான்ஸ்பர் ஊடாக இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக அவர்களின் கணக்கிலிருந்து பணம் செலுத்தி கம்பனி எந்தவொரு அறிவித்தலுமின்றி இறக்குமதி செய்த அமெரிக்க டொலர் 154,928.27 பெறுமதியான டைல் இருப்பும் துறைமுகத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்காக அந்நியச் செலாவணி நாட்டிலிருந்து வெளியே செல்வதற்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்து அனுமதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்தக்காலப் பகுதியின் போது VARMORA GRANITO PRIVATE LTD இலிருந்து அமெரிக்க டொலர் 154,928.27 பெறுமதியுடைய பட்டியல்களுக்கு உரிய டைல் இருப்பு ART Decoration International Pvt Ltd இறக்குமதி செய்து இது தற்போது துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வழங்குநருடன் காணப்படுகின்ற நீண்டகால வியாபார தொடர்பின் காரணமாக கொண்டு அமெரிக்க டொலர் 138,898.37 பெறுமதியை விடுவிக்குமாறு எழுத்து மூலம் அறிவித்திருந்ததுடன் அந்த கொடுப்பனவுகள் BMC ஊடாக மேற்கொள்ளப்பட வில்லை. | வேண்டி யிருந்தமை கம்பனியின் முகாமைத்துவத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | அந்நியச் செலாவணி ஒதுக்கப் பற்றாக்குறையின் காரணமாக 2023 சனவரி 01 ஆம் திகதிய இலக்கம் 2312/78 என்ற அதிவிஷேட வர்த்தமானியில் செரமிக் டைல் இறக்குமதி மீண்டும் கைவிடப்பட்டிருக்கும் போது கம்பனியால் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் தனியார் வீடமைப்பு செயற்திட்டத்திற்காக டைல் இறக்குமதி செய்த Win Holdings மற்றும் தனியார் கட்டிடமொன்றின் முதலாவது மாடியை நவீனமயப்படுத்துவதற்காக டைல் இறக்குமதி செய்த Lenro Impex (pvt) Ltd. இற்காக இதற்காக நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும் அந்த நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட டைல் இருப்பில் 1500 டைல் அளவு 2023 யூலை 06 ஆம் திகதி கம்பனிக்கு எந்தவொரு இலாபமோ அல்லது வரித்தொகையோ அறவிடாமல் விடுவிப்பதற்கு பொது முகாமையாளர் அங்கீகாரத்தில் இடமளிக்கப்படடிருந்தது. | 2023.05.16 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்ட டைல் இருப்பு துறைமுகத்திலிருந்து விடுவித்தல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் தாமதம் அடைந்தமையினால் லென்றோ இம்பெக்ஸ் நிறுவனத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்ட தாமதக் கட்டணத்தின் அளவு உயர்வடைந்ததன் அடிப்படையில் நிதி ரீதியாக சிக்கலான நிலைமைக்கு முகங்கொடுக்கப் பட்டிருந்தமை காண்பித்து மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் இலாபப் பங்கு மற்றும் அவர்களுக்குரிய வரித்தொகை முதலாவது வழங்க | வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

முடியாதிருந்ததாகவும் அது அடுத்துவரும் விற்பனை வருமானத்தின் போது வழங்கப்படுவதாகவும் எழுத்து மூலம் உடன் படிக்கை உத்தரவாத்தைக் கவனத்திற் கொண்டு மற்றும் 5860 டைல் இருப்பொன்று விற்பனைக்காக எஞ்சியுள்ள நிசான் டைல் 1500 அளவிற்காக விற்பனை வருமானம் அவர்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக கட்டிப் பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் விநியோகித்தல்.**

2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 07 வருட காலப் பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் அமுல்படுத்தப்பட்ட சூரிய பொக்குன தேபொக்காவ வீடமைப்பு திட்டத்தின் வீட்டு உரிமையாளர்களுக்குத் தேவையான கட்டிடப் பொருட்கள் கடன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டிப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலாந்தோட்ட, தங்காலை, லுணுகம்பெஹகர, திஸ்ஸ, வீரதெட்டிய, எம்பிலிபிட்டி, சூரியவெவ போன்ற கிளைக் களஞ்சியங்களிலிருந்து ரூபா 34.69 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்கள் எந்தவொரு வரையறையும் இன்றி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 30 ஆந் திகதி வரை இந்தக் கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த செயற்திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கட்டளையொன்று கிடைத்திருக்கவில்லை. முன்னாள் நிறுவனத்தின் நிருவாக அதிகாரிகளினால் உரிய கிளை முகாமையாளருக்கு எழுத்து மூலம் ஆலோசனை வழங்கி வீடமைப்புத் திட்டத்தின் வீட்டு நலனாளிகளுக்குரிய கட்டளைகளைப் பெற்று வீட்டு நலனாளிகளின் பெயரில் கடன் அடிப்படையில் விநியோகித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பொருட்களுக்காக பணம் அறவிடுவதற்காக கிளை முகாமையாளருக்கு கையளிக்கப் பட்டுள்ளது.

தற்போது கடனை அறவிடுவதற்காக நிறுவனத்தில் 03

கம்பனியின் வியாபார நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய முடியுமான வகையில் கம்பனியின் முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2023.10.31 ஆந் திகதி வரையும் களஞ்சியப் பெறுவனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 98,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. | |

## 2.10 செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வணிக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம் 1992 ஆம் ஆண்டின் போது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழும், 2010 ஆம் ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழும் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் தூர நோக்காக ‘‘நியமத்துக்கு இணங்க உயர் தரத்தினை உடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை போட்டி விலையின் கீழ் நாடளாவிய ரீதியில் வழங்குதலுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் அரச நிறுவனமாக சமூப் பொறுப்புக்களை நிறைவேற்றி இலங்கை மக்களுக்கு ஆகக்கூடிய நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதல்’’ ஆகும். எனினும் தற்போது வரையில் பிரதான அலுவலக சூழலில் பேணிச்செல்லப்படுகின்ற நவீனமயப்படுத்தப்பட்ட கண்காட்சிக் கூடத்திலும், கிளை அலுவலகங்களின் மூலமும் தனியார் கட்டிடப் பொருட்கள் உபகரணங்கள் வழங்குபவர்க ளிடமிருந்து கொள்வனவு செய்த கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இலாப எல்லையுடன் விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் பிரகாரம் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் கம்பனியின் தூர நோக்கு மேவுகை செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்த 2013 முதல் 2018 வரையான 06 வருட காலத்தின் போது தேறிய நட்டம் ரூபா 15 மில்லியன் முதல் ரூபா 167 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | 1977 இன் பின்னர் திறந்த பொருளாதாரம் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்கள், இயந்திர உபகரணங்கள், உபகரணங்கள் கருவிகள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் இலங்கை முழுவதும் விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது என அறியத்தருகின்றோம். இந்த சட்டம் எதிர்காலத்தின் போது நிறுவனத்திற்கு அருகதையாக பொருத்தமான வகையில் மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் தற்போது பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்கின்ற வகையில் போட்டிச் சந்தையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நுழைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கம்பனியின் நோக்கம் மற்றும் பணிக்கூற்றின் பிரகாரம் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் செயற்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

**2.11 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசம்பர் 29 ஆந் திகதி வரையில் கம்பனிக்கு எதிராக நீதிமன்றத்தில் 02 வழக்குகள் விசாணைக்காக நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் கம்பனியால் செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 8.48 மில்லியன் தொகை உரிய தரப்பினருக்கு மேலும் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது வரையில் காணப்படுகின்ற வழக்குகள் 02 இன் விபரம் பின்வருமாறு.<br><br>1. MC 6785/17 EPF - ரூபா 3.98 மில்லியன் தொகையை செலுத்துவதற்கு தீர்மாக்கப் பட்டிருந்ததுடன் மாதாந்தம் ரூபா 50,000 வீதம் செலுத்தி 2022.12.29 ஆந் திகதிக்கு முன்னர் மேலும் ரூபா 1.13 மில்லியன் (23 தவணைகள்) பணம் செலுத்துவதற்கு எஞ்சியிருந்தது.<br><br>2. HC (Civil) 316/2003(1) - ஒவ்வொரு மாதமும் ரூபா 100,000 வீதம் இணங்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் ரூபா 7.36 மில்லியன் (74 தவணைகள்) செலுத்தப்பட்டிருந்தது. | கம்பனிக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளைக் குறைக்கும் வகையில் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தேசிய போட்டியாளர் கேள்வி கோராமல் இறக்குமதியாளர்களின் கூறு விலையினை கோரி பாக்கிஸ்தான் நிறுவனம் ஒன்று இலங்கையின் கம்பனியான DMW Ventures (Pvt) Ltd உடன் மெற்றிக் தொன் 1 அமெரிக்க டொலர் 79.50 வீதம் சீமெந்து மெற்றிக் தொன் 5600 தொகை கிலோ கிராம் 50 வீதம் "BMC" பெயர் அச்சிட்டப்பட்ட கடதாசி உறைகளில் வழங்குவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2022 மார்ச் 14 ஆந் திகதி அதற்கான பணம் வைப்பாக ரூபா 05 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் காணப்படுகின்ற அந்நிய செலவாணி நெருக்கடியின் இடையில் நாணய கடிதம் திறத்தல் மக்கள் வங்கி நிராகரித்தன் காரணமாக சீமெந்து | ரூபா 05 மில்லியன் DMW Ventures (Pvt) Ltd இற்கு பணம் செலுத்துதல் தொடர்பாக கடிதம் ஒன்று அனுப்பபட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அந்த நிறுவனத்தால் அந்த நிறுவனம் செயற்திட்டத்திற்காக குறைத்துக் கொண்டதாக அறிவித்திருந்த போதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் எங்களுக்கு அந்தப் பணம் வழங்க வேண்டியதாக இருந்தது. ஆதன் பிரகாரம் வீடமைப்பு அமைச்சின் பிரதான சட்ட | ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி செய்ய முடியாது இருந்ததுடன் அது தொடர்பாக முன்னர் உறுதிப்படுத்தல் இன்றி செலுத்தப்பட்ட ரூபா 05 மில்லியனை மீண்டும் அறவிட முடியாதிருந்தது. | உத்தியோகத்தரின் ஆலோசனையின் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |

**2.12 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1964 இன் 28 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் பிரகாரம் 1974.09.09 ஆம் திகதி அரசாங்கத்திற்குரிய காணி 1.1157 ஹெக்டேயர் மற்றும் 3.2 ரூட் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய காணி கம்பனிக்கு கையளித்தல் சான்றிதழ் பத்திரத்தின் பிரகாரம் இந்த காணி உரிய அமைச்சின் சரியான அங்கீகாரம் இன்றி கைப்பற்றப்பட்ட பணிகள் தவிர ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக உரிய காணியில் 04 ரூட் 31.40 பேர்ச் அளவான 03 காணிக்கூறுகள் 2005 நவம்பர் 14 ஆம் திகதி, 2007 சனவரி 24 மற்றும் 2005 ஆகஸ்ட் 14 ஆம் திகதிகளில் HDFC ரியல் எஸ்டேட் டெவலப்மன்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் ரூபா 222.50 மில்லியன் தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், 2012 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 359.32 மில்லியன் தொகை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தி காணிகளின் உரித்தை விடுவித்துக் கொள்வதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் கம்பனி அதன் பிரகாரம் பணத்தை செலுத்தி காணிகளின் உரித்தை மீளப்பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் காணிகளின் தீர்த்தல் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு HDFC வங்கியினால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | உரிய காணி 2022 நவம்பர் மாதம் நீதிமன்ற கட்டித்தின் அடிப்படையில் உரிமை போராடல் HDFC வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரம் இன்றி மற்றும் நோக்கத்திற்குப் புறம்பாக கையளிக்கப்பட்ட காணி விற்பனை செய்ய முடியாதிருந்ததுடன், கம்பனிக்கு சொந்தமான சொத்துக்கள் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்வதை கண்காணித்தல் வேண்டும். |
| (ஆ) | 1998 நவம்பர் 09 ஆம் திகதி இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு 12 இல் அமைந்துள்ள கம்பனிக்கு சொந்தமான 100 பேர்ச் அளவான | உரித்துறுதி எழுதுவதற்காக தேவையான ஆவணங்களுக்கு | உரிய முத்திரைக் கட்டணத்தை சரியான பிரகாரம் செலுத்தி காணியின் உரித்தை |

| | | | |
|---|---|---|---|
| | காணி இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியன் பிணை முறியின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் கம்பனியால் 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் மேற்கூறப்பட்ட விற்பனைக்குரிய பணமான ரூபா 70 மில்லியன் தொகையுடன் கடன் மேலதிக பற்று தொகையும் அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கி ரூபா 199.05 மில்லியன் தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கி மேற்கூறப்பட்ட பணத்தை ஈடுசெய்ததன் பின்னர் வங்கியால் தயாரித்து அனுப்பப்பட்ட உரித்துறுதியின் பெறுமதிக்குரிய முத்திரைக் கட்டணமான ரூபா 5.38 மில்லியன் தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 யூலை 31 ஆம் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இடையே 2015 ஆம் ஆண்டு முதல் கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் நாளது வரையாக்கப்படாத விண்ணப்பம் 20 மற்றும் 15, 2023 யூன் மாதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணமான ரூபா 5.38 மில்லியன் தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் உடன்படிக்கை பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை வங்கி அறிவித்தன் பின்னர் மதிப்பீட்டு முத்திரைக் கட்டணம் ரூபா 18.39 மில்லியனாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை குறைத்துக் கொள்வதற்கு மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | கையேற்பதற்கு முகாமைத்துவம் கண்காணித்தக் கொள்ளல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 417/ஏ, கடை வீதி கிழக்கு, புகையிரத நிலைய வீதி, மாத்தறை என்ற காணியில் 01 றூட், 2.8 பேர்ச் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் கம்பனி அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இந்த காணி பகுதி தொடர்பாக இரண்டு நிறுவனங்களுக்கு இடையே கடிதப் பரிமாறல்கள் மேற்கொண்டு தற்போது காணியை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அரசாங்க நிறுவனம் என்ற வகையில் முகாமைத்துவத்தால் ஒன்றிணைந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 03 றூட் 35.6 பேச் அளவான அநுராதபுர காணியொன்றை வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த போதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த அநுராதபுர பாதுகாப்பு சபைக்குரிய காணியாகும் இது 99 வருட குத்தகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிட கூட்டுத்தாபனத்திற்கு உரித்து உள்ளது. | உரிய ஆதனம் தொடர்பாக உரித்துறுதியை பெற்றுக்கொள்வதற்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அநுராதபுரம் எமிபிலிபிட்டி, கண்டி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, நுவரெலியா இல் அமைந்துள்ள 04 ஏக்கர் 0.5 றூட் 9.1 பேர்ச் அளவான 07 | இந்தக் காணிக்காக நில அளவையாளர் திட்டம் பெற்றுக்கொள்வதற்கு தேவையான | கம்பனிக்குரிய காணி மற்றும் கட்டிடங்களுக்காக நிலஅளவையார் வரைபட |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளுக்காக நிள அளவையாளர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | திட்டத்தை தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் கீழ் உள்ள 03 ஏக்கர் 3.5 றூட் 17 பேர்ச் அளவான மொறட்டுவ, அநுராதபுரம், அம்பாறை என்பவற்றில் அமைந்துள்ள காணிகளுக்காக உரித்துறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரித்துறுதியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உரித்துறுதியை தயாரித்து பதிவு செய்து கொள்வதற்கு உரிய நிறுவனத்துடன் கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | இலக்கம் 549/A, பொருப்பன, மொரட்டுவை காணியின் கையளித்தலைப் பெற்றுக்கொள்வதற்காக 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், கம்பனியால் காணியின் உரித்துறுதியை தயாரித்துக் கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்துறுதி எழுதும் மிகுதி நடவடிக்கைகள் காணி அமைச்சின் உதவிக் காணி ஆணையாளரின் உதவியுடன் 2022.09.30 ஆந் திகதிய இலக்கம் L2/SLO/COL/MRT/006 என்ற கடிதம் மூலம் மொறட்டுவ பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது உரித்துறுதி எழுதும் நடவடிக்கைகளுக்காக மொறட்டுவ பிரதேச செயலாளரால் மாகாண காணி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | உரித்துறுதியை தயாரித்து பதிவு செய்து கொள்வதற்கு தொடர்புடைய நிறுவனத்துடன் கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கம்பனிக்கு சொந்தமான யாழ்ப்பாணம், உப்புக்குளம் கரை குன்குனியாரில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் காணி மற்றும் நுவரெலியா பம்பரகெலே கட்டிடம், எம்பிலிப்பிட்டிய யோதகம 02 வீடுகள் என்பன 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | அபிவிருத்தி செய்து வருமான வரிகள் மூலம் உழைப்பதற்காக மிகுதி நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றது. | காணப்படுகின்ற வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மகாவலி அதிகார சபையால் 50 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள எம்பிலிபிட்டி 01 றுட் காணிக்காக 1997 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை வரித்தொகை மற்றும் தண்டப் பணம் ரூபா 1,654,330 ஆகும். இந்த வரித்தொகை செலுத்தாமையின் காரணமாக வரியினை பூர்த்தி செய்ய முடியாது இருந்தமையும் குத்தகையை | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை வாடகையை உள்ளடக்கிய வாடகை உரிய பிரகாரம் செலுத்துவதற்கு அந்தக் காணியை பயன்படுத்துவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்ய முடியாது இருந்தமையும் சட்டரீதியான நடவடிக்கை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையும் மகாவலி அதிகார சபைக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | | |
| (ஒ) | புதிய மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்ளாமல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விலையின் கீழ் மீளாய்வாண்டின் போதும் சீமெந்து களஞ்சியம் இலக்கம் 06 களஞ்சியம் மற்றும் சங்கராஜ இலக்கம் 11 களஞ்சியம் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் புதிய விலைகளின் கீழ் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாம் வாடகை அளவினை நாளது வரையாக்கி களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஓ) | தேசிய லொத்தர் சபையின் சேவை நடவடிக்கைகளுக்காக இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கம்பனியின் வளவில் இலக்கம் 07 என்ற களஞ்சியம் 2017 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 1,513 சதுர அடி அளவில் சதுர அடி ஒன்று 55 வீதம் மாதாந்தம் ரூபா 83,215 தொகைக்கும், இலக்கம் 05 மற்றும் 06 களஞ்சியம் 2016 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் சதுர அடி ஒன்று ரூபா 55 வீதம் 1,568 சதுர அடிக்காக மாதாந்தம் ரூபா 86,240 தொகைக்கும், இலக்கம் 01, 02, 03, 04 என்ற களஞ்சியங்கள் 2015 மே 27 ஆந் திகதி முதல் சதுர அடி ஒன்று ரூபா 55 வீதம் முதல் ரூபா 3,136 சதுர அடிக்காக மாதாந்தம் ரூபா 172,480 தொகைக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை புதுப்பிக்காமல் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளின் விலையில் 2020 ஆம் ஆண்டின் போதும் அந்த களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் களஞ்சியத்திற்காக 2018 யூலை முதல் 2021 சனவரி வரை செலுத்த வேண்டிய ரூபா 60,382 ஆன மின்சார பட்டியலும் தேசிய லொத்தர் சபையினால் செலுத்தப்படாதிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி களஞ்சியம் மீள கையளிக்கப்பட்டிருந்தது. | இலக்கம் 01, 02, 03, 04, 05, 06, 07 களஞ்சியம் தேசிய லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உடன்படிக்கை செய்யப்படாதிருந்ததுடன் வாய் மூல அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்பட்ட களஞ்சியம் ஆகும். 2018 முதல் 2021 வரையான காலத்தில் எங்களுக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 60,382 தொகை தொடர்பாக அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் உடன்படிக்கை முடியாது இருந்தாக தேசிய லொத்தர் சபை பணிப்பாளர் சபையினால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வாடகை அளவினை நாளதுவரையாக்கி முறையான உடன்படிக்கையின் கீழ் களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (ஔ) | 2015 ஏப்ரல் முதல் ஒரு சதுர அடி ரூபா 45 வீதம் 1480 சதுர அடி அளவான இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் கம்பனி வளவில் கம்பனிக்கு சொந்தமான களஞ்சியமொன்று ரூபா 66,600 | முன்னாள் நிறுவனத்திற்கு சொந்தமாக இருந்த சட்ட உத்தியோகத்தர் இல்லாதிருந்தமையால் புதிய உடன்படிக்கை செய்வதற்கு | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் களஞ்சியங்களை வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவை பணத்தை |

| | | |
|---|---|---|
| மாதாந்த வாடகையில் வியாபாரி ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2017 ஏப்ரல் 09 ஆம் திகதி வரையாக இருந்ததுடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் காணப்பட்ட வாடகைத் தொகைக்கே 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் வழங்கப்பட்டிருந்தது. | முடியாதிருந்தது. துற்போது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்துவதற்கு பணிப்பாளர் சபையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.13 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 12 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் அதில் இரண்டு செயலிழந்த நிலையில் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்காக<br><br>சரியாக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை குறிப்பிட்டு காசேடு பேணிச் செல்லப்பட்டிருக்காததுடன். வங்கி கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வங்கி கணக்கு மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 03 வங்கிக் கணக்குகளில் வரவு மீதி ரூபா 25.78 மில்லியன் ஆக இருந்ததுடன், 07 கணக்குகளில் செலவு மீதி ரூபா 303.04 மில்லியன் ஆகும். மதன் காரணமாக கம்பனி போதியளவான பிரகாரம் நிதி தொடர்பான நிர்வாகத்தை அமுல்படுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது மீண்டும் 2021 ஆம் உடைய கர்சேடு தயாரித்து அதன் பிரகாரம்<br><br>வங்கிக் கூற்று மீதிகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்ட காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்றுக்கள் 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்றது. | மிகவும் சரியாக கணிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப மீதியை<br><br>அடிப்படையாகக் கொண்டு காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று மாதாந்தம் தாயரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அது நிதி முகாமைத்துவம் தொடர்பாக அவர்களின் பொறுப்பாகவும் உள்ளது. |

**3. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கைநூலின் கீழே குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் பிரகாரம் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(i) 3.3(i) பந்தியின் பிரகாரம் பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) 3.2(i) பந்தியின் பிரகாரம் கிடைக்க வேண்டிய சரியான அங்கீகாரம் பெற்று ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று கம்பனியிடம் காணப்படவில்லை. | PED/12 சுற்றறிக்கை பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வணிகப் பிரிவில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அலுவலகத்தில் (மேசை இலாச்சி) கம்பனியின் வழங்குனர்களில் மூவரின் தலைப்புக்கள் மற்றும் முத்திரை வைக்கப்பட்டதன் காரணமாக 2022 ஒக்டோபர் 27 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் முன்னாள் பொது முகாமையாளரின் வேலை நீக்கஞ்செய்யப்பட்டு வர்த்தக பிரிவு முத்திரை வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2022 நவம்பர் 28 ஆந் திகதியில் கொழும்பு குற்றப் புலனாய்வு பணியகத்தின் இலக்கம் IR/629/06/22 என்ற முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இது வரையிலும் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்பிக்கப்படவில்லை.<br><br>அவ்வாறே பொது முகாமையாளர் 2020 நவம்பர் 02 ஆந் திகதி அந்த பதவிக்கு நியமிக்கும் போது நேர்முக பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட சகல சான்றிதழ் போலியானது என உள்ளக கணக்காய்வாளரின் 2023 சனவரி 27 ஆம் திகதிய அறிக்கையில் -- அறிவிக்கப்பட்டிருந்தது. இது வரையும் அது தொடர்பான விசாரணைகள் நடத்த தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது ஆகஸ்ட் மாதம் முதல் இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பிரிவின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்/ செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 5.1 மற்றும் 5.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பனியின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு இணைந்ததாக செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்னர் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023.10.11 ஆந் திகதி 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைப்பு திட்டம் மற்றும் அதற்கு இணையான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |